STC.No. 1190/2023
நாள் 25.09.2025.
P.W.1 – (விஜயலட்சுமி )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் இல்லதரசியாக உள்ளேன். நான் விழாக்களுக்கு மட்டும் சிறிது ஜவுளி வாங்கி வியாபாரம் செய்வேன். நான் ஜவுளி வியாபாரம் பார்ப்பதற்கு உரிமம் ஏதும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எதிரியுடன் கிட்டதட்ட 10 ஆண்டுகள் பழக்கம். எதிரியின் மாமியார் என் வீட்டில் குடியிருந்தார். எனக்கு ஒரு மகன், ஒரு மகள், என் மகன் பெயர் அசோக் மகள் பெயர் சுபாஸ்ரீ. சுபாஸ்ரீ இல்லதரசியாக இருக்கிறார். அவர் கணவர் 2 ஆண்டுகளுக்கு முன் எங்கள் வீட்டில் இருந்து Work From Homeஆக வேலை பார்த்தார். என் மகள் சுபாஸ்ரீக்கு 28 வயது இருக்கும். எனக்கு பாங்க் ஆப் இந்தியா மற்றும் கனரா வங்கி ஸ்ரீவில்லிபுத்தூர் கிளையில் வங்கி கணக்கு உள்ளது. நான் இதற்கு முன் எதிரிக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் எதிரி கைமாற்றாக வாங்குவார் கொடுப்பார். 01.05.2022ற்கு முன் நான் எதிரிக்கு அதிகபட்சம் கடன் எவ்வளவு கொடுத்திருப்பேன் என்றால் ரூ.50 ஆயிரம் அல்லது ரூ.1 லட்சம் கொடுத்திருப்பேன்.

01.05.2022 அன்று நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொன்ன தேதியில் எதிரி எனக்கு செலுத்தவேண்டியதாக அசலோ வட்டியோ பாக்கி ஏதும் இல்லை. நான் எதிரியை தவிர வேறு யாருக்கும் கடனிற்கு பணம் கொடுப்பேனா என்றால் ஆம். தெரிந்த நபர்களுக்கு கடன் கொடுப்பேன். இந்த வழக்கு தவிர வேறு வழக்கு சாந்தி முருகன் ஆகியோருக்கு எதிராக ரூ.3 லட்சம் புரோநோட்டு வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கஸ்தூரி என்பவர் மீதும் ஒரு புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படுவது ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.243/2024 தாக்கல் செய்த வழக்கின் பிராதின் நகல் என்றால் சரி. அது **<u>எ.சா.ஆ.1</u>** ஆகும். அந்த பிராது 20.04.2024 அன்று பிரதிவாரி கஸ்தூரிக்கு ரூ.3 லட்சம் கொடுத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி.

என் மகள் சுபாஸ்ரீ வட்டிக்கு கடன் கொடுப்பார் என்றால் ஆம். Work From Home சமயத்தில் இங்கிருந்த போது தெரிந்தவருக்கு கடன் கொடுத்தார். என் மகள் சுபாஸ்ரீ யார்யாருக்கு கடன் கொடுத்தார் என்று எனக்கு தெரியும் என்றால் எனக்கு ரொம்ப தெரியாது. என் மகள் சுபாஸ்ரீ எதிரிக்கு எந்த கடனும் கொடுக்கவில்லை என்றால் சரி. சாட்சி தற்போது அவருக்கு உறுதியாக தெரியாது என தெரிவித்தார். நான் பான்கார்டு வைத்துள்ளேன். என்னுடைய 2022–2023 ஆண்டு வருமான வரிக்கணக்கை பார்வையிட்டால் நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் இந்த வழக்கு கடன் விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. நான் என் வருமான வரிக் கணக்கில் இந்த வழக்கு கடனை தெரிவிக்கவில்லை. நான் கஸ்தூரி என்பவருக்கு கொடுத்ததாக சொல்லும் தொகையும் அந்த காலத்திற்கான உரிய வருமான வரிக் கணக்கில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரி. அந்த கஸ்தூரி இந்த வழக்கின் எதிரியுடைய உறவினர் என்றால் சரி. எதிரியின் மனைவிக்கு கஸ்தூரி சித்தியாவார். நான் சாந்தி முருகனுக்கு கொடுத்ததாக சொல்லும் கடனுறுதி சீட்டு கடனையும் நான் என் வருமான

வரிக் கணக்கில் காட்டவில்லை என்றால் சரி.

எதிரி வீடு கட்டுமான செலவிற்காக கடன் வாங்கியதாக சொல்லும் வீடு எதிரி எங்கு கட்டினார் என்றால் ஸ்ரீவில்லிபுத்தூரில் காமாட்சி அம்மன் கோவிலுக்கு எதிரே கட்டினார். யார் பெயரில் வீடு கட்டினார் என்றால் அது எனக்கு தெரியாது. எதிரி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாய துறையில் கிளர்க்காக வேலை பார்த்து வருகிறார் என்றால் அவ்வாறு வேலை பார்ப்பதாக சொன்னார் எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லும் கஸ்தூரி ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் வேலை பார்க்கிறார் என்றால் முன்னர் வேலை பார்த்ததாக சொன்னார். கஸ்தூரியின் வயது சுமார் 52 இருக்கும். சரியாக தெரியாது. 21.07.2023 அன்று எதிரி என் மகள் சுபாஸ்ரீ வங்கிக் கணக்கிற்கு UPI மூலமாக 2 முறையாக ரூ.45,000/— செலுத்தியுள்ளார் என்றால் இருக்கலாம் அவளிடம் வாங்கியதை கொடுத்திருக்கலாம். 28.09.2020 அன்று எதிரி என் வங்கி கணக்கிற்கு UPI மூலம் ரூ.50,000/— செலுத்தியுள்ளார் என்றால் இருக்கலாம் பணம் வாங்குவார் கொடுப்பார்.

என்னுடைய 2 வங்கிக் கணக்கு பட்டியல்களை 2018ம் ஆண்டு முதல் வங்கி கணக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எதிரி மற்றும் எதிரியின் மனைவி என் வங்கிக் கணக்கிற்கு எவ்வளவு பணம் செலுத்தியுள்ளார்கள் என்ற விபரம் தெரியவரும் என்றால் ஆம். எனக்கும் என் மகளுக்கும் மனஸ்தாபம் இல்லை என்றால் சரி. என் மகள் சுபாஸ்ரீ எத்தனை வங்கிக் கணக்குகள் வைத்துள்ளார் என்றால் பாங்க் ஆப் இந்தியாவில் வங்கி கணக்கு வைத்துள்ளார் என்று மட்டும் தெரியும் எத்தனை வங்கிக் கணக்குகள் என்று எனக்கு தெரியாது. என் மகளுக்கு 2019ம் ஆண்டு திருமணம் ஆகியது. என் மகளுக்கும் பான் கார்டு உள்ளது என்றால் சரி. என் மகள் வருமான வரிக்கணக்கை பார்த்தால் அவர் யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளார் என்ற விபரம் துலங்கும் என்றால் 2 வருடங்களாக தான் வருமான வரி தாக்கல் செய்கிறார். நான் 2 வருட காலமாக தான் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்கிறாரா என்ற விபரம் அவர் வருமான வரி ஆவணங்களை பார்த்தால் தெரியும் என்றால் ஆம். எனக்கு துல்லியமாக தெரியாது. என் மகள் சுபாஸ்ரீ வங்கிக் கணக்கிற்கு கஸ்தூரி 17.04.2021 அன்று ரூ.5 லட்சம் அனுப்பினார் என்றால் அவர்களுக்கு இடையேயான பண பரிமாற்றம் எனக்கு தெரியாது. எ.சா.ஆ.1 பிராதில் 20.06.2021 அன்று கஸ்தூரி என்னிடம் குடும்ப செலவிற்காகவும் வீட்டு கடனை அடைப்பதற்காகவும் ரூ.3 லட்சம் கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி.

என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார். கடையை வாடகைக்கு விட்டுள்ளார். என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்ய அரசிடம் உரிமம் பெறவில்லை. ரியல் எஸ்டேட் தொழில் செய்ய பதிவு ஏதும் செய்யவில்லை. பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு புதிதாக கட்டிவரும் வீடு கட்டுமான வகைக்கு என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் குடும்ப செலவிற்காக என குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. பு.சா.ஆ.5 கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளது இசக்கியப்பன் என் மருமகன் மற்றும் கவிதா என்பவர் எல்ஐசி முகவர் ஆவார். பு.சா.ஆ.5 கடனுறுதி சீட்டு எழுதியதாக குறிப்பிட்டுள்ளது பிராபாகர் அவர் எங்கள் கடை வாடகைத்தாரர் அப்போது வாடகை கொடுக்க வந்தார். என் வீட்டில் என் கணவர் மட்டும் தான் சம்பாதிக்கும் நபர் என்றால் சரியல்ல. என் மகனும் இங்கிலாந்தில் வேலை பார்த்து சம்பாதிக்கிறார். என் கணவர் லேவாதேவி தொழில் செய்கிறாரா என்றால் இல்லை.

நான் மற்றும் என் மகள் மட்டும் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறோமா என்றால் தெரிந்தவர்களுக்கு மட்டும் பணம் கொடுப்போம். நான் கடன் கொடுப்பதற்காக மணிலேண்டர்ஸ் உரிமம் பெறவில்லை என்றால் சரி. நான் கொடுத்ததாக சொல்லும் தொகை வங்கி மூலமாக கொடுக்காததற்கு என்ன காரணம் என்றால் ஒரு வழக்கு முடிந்து வந்த பணம் வீட்டில் இருந்தது. நான் சொல்லும் கடன் தொகையை எதிரி அந்த தேதிக்கு ஒரு வாரம் 10 நாட்களுக்கு முன் கேட்டார். நான் அவர் கேட்ட கடன் தொகையை எவ்வளவு நாட்களில் தருவதாக சொன்னேன் என்றால் ஒரு வழக்கு நடைபெற்று கொண்டு இருக்கிறது அது முடிந்து பணம் உங்களிடம் தருவதாக சொன்னார். அந்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரி.

அந்த வழக்கு ரவிசங்கர் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அந்த வழக்கில் ரூ.9,50,000/- எனக்கு வந்தது. எந்த நீதிமன்றம் என்று எனக்கு நினைவில்லை. அந்த வழக்கு காசோலை வழக்கு. சாட்சி தற்போது அது வழக்கு அல்ல சட்ட அறிவிப்பு வழங்கியவுடன் சமாதானம் ஆனதாகவும் தெரிவித்தார், புரோநோட்டிற்காக வழக்கு தாக்கல் செய்தததாகவும் தெரிவித்தார். நான் எதிரி கடன் தேதிக்கு ஒரு வாரம் 10 நாட்களுக்கு முன் என்னிடம் கடன் கேட்டதாகவோ ரவிசங்கர் என்பவருக்கு எதிராக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவோ அதில் பணம் வந்துவிடும் வந்தவுடன் எதிரிக்கு பணம் தருவதாகவோ சொல்லவில்லை என்றால் சரி. எனக்கு அவ்வாறு சொல்லவேண்டும் எனத் தோணவில்லை. பு.சா.ஆ.5 ஆவணத்தில் வீட்டு கடனை திரும்ப செலுத்துவதற்காகவும் அவரச நிமித்தம் குடும்ப செலவிற்காகவும் எனச் சொல்லப்பட்டது என்றால் சரி. பு.சா.ஆ.5 ஆவணத்தில் வீட்டுக் கடன் என உள்ளது கைப்பட எழுதப்பட்டது என்றாலும் அவரச நிமித்தம் குடும்ப செலவிற்காகவும் என்பது அச்சிடப்பட்டது என்றால் சரி. பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதியில் பு.சா.ஆ.5 புரோநோட்டு நிரப்பப்பட்டு சாட்சிகள் கையொப்பம் பெறப்பட்டிருந்தால் அதில் உள்ள விபரங்கள்தான் பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பில் இருக்கும் என்றால் சரி.

பு.சா.ஆ.4 குடும்ப செலவிற்காக அவசர நிமித்தம் என்ற வாசகங்கள் இடம் பெறவில்லை என்றால் சரி. நான் சொல்ல மறந்திருக்கலாம். பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு ஆவணங்களை பார்த்துதான் அனுப்பப்பட்டது. என் மகள் சுபாஸ்ரீயை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. சுபாஸ்ரீயை விசாரித்தால் அவர் எதிரிக்கு, கஸ்தூரி மற்றும் எதிரியின் மனைவிக்கு எவ்வளவு பணம் கொடுத்துள்ளார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரி. என் மகள் சுபாஸ்ரீயை விசாரித்தால் அவர் என் சார்பில் பணம் அந்த மூன்று நபர்களிடம் பணம் பெற்றுக் கொண்டாரா என்ற சங்கதி தெரியவரும் என்றால் சரி. எதிரியின் மாமியார் எங்கள் வீட்டில் வாடகைக்கு இருந்ததாக இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி. நான் இதுவரை எதிரிக்கு, கஸ்தூரிக்கு மற்றும் எதிரியின் மனைவி மகாலட்சுமி, சாந்தி, முருகன் மற்றும் ரவிசங்கர் ஆகியோருக்கு நான் பணம் கொடுத்ததாக சொல்வது வங்கியின் மூலம் பணம் அனுப்பவில்லை என்றால் சரி. தற்போது சமீபத்தில் செண்பக சுந்தரி என்பவருக்கு வங்கியின் மூலம் பணம் கொடுத்தேன். நான் சொல்வது போல் எதிரி மற்றும் கஸ்தூரி ஆகியோர் என்னிடம் கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்து கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டு எதிரி என்னிடம் கடன் பெற்ற சமயம் நான் எதிரியிடமும் கஸ்தூரியிடமும் நிரப்பப்படாத புரோநோட்டு மற்றும் தாவா காசோலை ஆவணங்களில் கையொப்பம் மட்டும் பெற்று வைத்திருந்தேன் என்றாலும்

பின்னர், அவ்வாறு பெறப்பட்ட ஆவணங்களில் என் விருப்பம்போல் நிரப்பி இருவருக்க எதிராகவும் தனித்தனியாக வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் அவ்வாறு கஸ்தூரிக்கு கடந்த 20.06.2021 அன்று ரொக்க கடன் ரூ.3 லட்சம் கொடுத்த தேதியில் கஸ்தூரியின் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கிக் கணக்கில் ரூ.4 லட்சத்திற்கும் கூடுதலாக இருப்பு தொகை இருந்தது என்றாலும் அவருக்கு அன்றைய தினம் ரூ.3 லட்சம் என்னிடம் கடன் வாங்க அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. இருவரும் என்னிடம் தனித்தனியாக கடன் வாங்கினார்கள்.

என்னிடம் கடன் வாங்கிய நபர்கள் மற்றும் அவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் நிரப்பப்படாத ஆவணங்களில் நான் கையொப்பம் மட்டும் பெற்று என் விருப்பம் போல் பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்வதற்கு வசதியாக நான் வங்கி மூலமாக கடன் கொடுப்பதில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் காசோலை மற்றும் புரோநோட்டில் கண்ட தொகைகளுக்கான மறுபயன் பொய்யானவை என்பதால் நான் என் வருமான வரிக் கணக்கில் அவற்றை காட்டுவதில்லை என்றால் சரியல்ல. ரவிசங்கரிடம் இருந்து எனக்கு கிடைத்ததாக சொல்லும் தொகையை நான் வருமான வரிக் கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி, எதிரியின் மனைவி மற்று் கஸ்தூரி ஆகியோர் எனக்கும் என் மகள் வங்கிக் கணக்கிற்கும் அனுப்பிய தொகை அனைத்தும் 2018ம் ஆண்டு எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைக்காக அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என் மகள் யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுப்பதில்லை என்றாலும் நான் கொடுக்கும் பணத்தை என் மகள் வங்கிக் கணக்கில் செலுத்த சொல்லி பெற்றுக் கொள்வேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.4 சட்டஅறிவிப்பு அனுப்பிய பின் எதிரி என்னை தொடர்பு கொண்டு அவருடைய பழைய ஆவணங்களை வைத்து ஏன் வாங்காத கடனிற்கு அறிவிப்பு அனுப்பினீர்கள் என கேட்டார் என்றாலும் நான் டைரியில் குறித்து வைத்திருப்பதால் அவ்வாறு அறிவிப்பு அனுப்பியதாக நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மாட்டேன் என்று சொன்னேன் என்றாலும் அதனால்தான் எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல.

அரசு ஊழியரான எதிரி அவர் வங்கிக் கணக்கில் பணம் இல்லாமல் காசோலை கொடுத்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பு.சா.ஆ.5 கடனுறுதி சீட்டு என்னிடம் இருந்திருக்கும்பட்சத்தில் எதிரி என்னிடம் காசோலையை கொடுத்து வழக்கில் மாட்டிக் கொண்டிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. நான் சொல்லும் கடன் சட்டப்படியாக வசூலிக்க கூடிய கடன் இல்லை என்றாலும் எதிரி எனக்கு எந்த தொகையும் செலுத்த வேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. நான் புகாரில் சொன்னதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் நான் சொன்ன நபர்கள் சாட்சியாக எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. பு.சா.ஆ.5 புரோநோட்டை எதிரி அதில் கண்ட தேதியில் எழுதித் தரவில்லை என்றாலும் அதில் உள்ள சாட்சிகள் என்னுடைய உறவினர்கள் மற்றும் வாடகைத்தாரர்கள் என்றாலும் சரியல்ல. என் வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.